# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 24

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்


**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# <u>பொருளடக்கம்</u>


| வ. எண் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–3 |
| II. | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் | 3–7 |
| III. | சிறைகளின் வகைப்பாடு | 7–9 |
| IV. | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் இயங்கி வரும் பிரிவுகள் | 9–14 |
| V. | மனிதவள மேம்பாடு | 14–20 |
| VI. | சிறை பாதுகாப்பு | 21–27 |
| VII. | பணியாளர் நலன் | 27–40 |
| VIII. | சிறைவாசிகளின் மறுவாழ்வு | 40–77 |
| IX. | சிறைகளில் கோவிட் – 19 மேலாண்மை | 77–82 |
| X. | புதிய செயல்பாடுகள் | 83–96 |
| XI. | முடிவுரை | 96–97 |
| | பிற்சேர்க்கை I–II | 99–110 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 24

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2021–2022

## I. முன்னுரை

மாநில அரசின் கீழ் இயங்கி வரும் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை, குற்றவியல் நீதியமைப்பு முறையின் முக்கிய கூறாக விளங்குவதுடன், பொறுப்பான, அமைதியான, பாதுகாப்பான சமுதாயத்தை பராமரிக்கும் பணியையும் மற்றும் பாதுகாக்கும் மிக கடுமையான பணியையும், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனைகளை செயல் படுத்துவது, சிறைவாசிகளின் பாதுகாப்பை

உறுதிப்படுத்துவதுடன், சிறைவாசிகளை தனிமனித கண்ணியத்துடன் நடத்துவதன் மூலம் அவர்களின் சமூக பொறுப்புணர்வை மேம்படுத்துவதன் மூலமும் செயல்படுத்துகிறது.

குற்றவாளிகள் தண்டனையை அனுபவிப்பது, அவர்களின் சீர்திருத்தம், மறுவாழ்வு, மீண்டும் குற்றம் செய்வதை தடுத்தல், குற்றவாளிகளை கண்காணித்தல் மற்றும் அவர்களை பொறுப்பான குடிமகன்களாக சமுதாயத்திற்குள் மறுபடியும் இணைந்திட வழிவகை செய்வது ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியது சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறையாகும். மேலும் சிறைவாச காலத்தில் அவர்கள் சட்டத்தை மதிப்பது மட்டுமல்லாமல் விடுதலைக்கு பின்னர் தன்னிறைவை அடையவும் உதவுகிறது.

சிறைவாசிகளுக்கு புதுமையான மறுவாழ்வு திட்டங்கள், சிறைதொழிற்

கூடங்களில் பல்வேறு வகையான திறன்சார் பயிற்சிகள் அளிப்பது ஆகியவற்றின் மூலம் அவர்கள் விடுதலைக்குப் பின்னர், மனித சமுதாயத்தில், சுதந்திரமாகவும், கண்ணிய மாகவும், தன்னிறைவு பெற்று வாழ வழிவகை செய்கிறது.

சீர்திருத்த நிர்வாக அமைப்பு, அதன் தற்போதைய தேவை, பாதுகாப்பு, ஒழுங்கு மற்றும் சிறைத்துறையில் தற்போது நடைபெறும் சீர்திருத்தம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தொடச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

## II. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் 142 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றுள் மத்திய சிறைச்சாலைகள் 9, பெண்களுக்கான தனிச் சிறைகள் 5, மாவட்டச் சிறைகள் 14, ஆண்களுக்கான கிளைச்

சிறைகள் 89, பெண்களுக் கான கிளைச் சிறைகள் 7, ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறை 1, பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 2, கிளைச்சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் 12 மற்றும் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் 3 ஆகியவை அடங்கும்.

காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இயக்குநரின் தரத்தில் உள்ள முதுநிலை இந்திய காவல்பணி அதிகாரி ஒருவரின் தலைமையில், உள்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இத்துறை இயங்குகிறது. இவருக்கு உதவியாக சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து சரகங்கள் ஒவ்வொன்றிலும் சிறைத்துறை துணைத் தலைவர்களும், தலைமை அலுவலகத்தில் சிறைத்துறை துணைத்தலைவர் அவர்களும் உள்ளனர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக கட்டமைப்பு **பிற்சேர்க்கை–I**–ல் வழங்கப்பட்டுள்ளது.

சிறைக் கண்காணிப்பாளர்களின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் மத்திய சிறைகளும், அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. புழல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச்சிறைகள் பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச்சிறைகள் பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாவட்ட சிறைக் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல்

சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றை சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற் பார்வையிட உதவி புரிகின்றனர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் சிறை அலுவலர்/ துணை சிறை அலுவலர்/ உதவி சிறை அலுவலர்/ முதல் தலைமை சிறைக் காவலர்/ முதல் நிலை சிறைக் காவலர்/ இரண்டாம் நிலைக் சிறைக் காவலர் / தொழில்நுட்பப் பணியாளர்கள்/ தொழில்நுட்பமல்லாத பணியாளர்கள்/ சீர்திருத்தப் பணியாளர்கள் / மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர்.

31.03.2021 அன்று சிறைத்துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை **5452** ஆகும்.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 23,592 ஆகும். சிறை வாரியான அங்கீகரிக்கப் பட்ட இடவசதி **பிற்சேர்க்கை–II–**ல் வழங்கப் பட்டுள்ளது.

## III. சிறைகளின் வகைப்பாடு

மத்திய சிறையில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங் குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படும் சிறைவாசிகள், தடுப்பு காவல் மற்றும் நீதிமன்ற காவல் / விசாரணை சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு அந்த

வகைப்பாட்டின் படி சிறைவாசிகள் தனித் தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டைச் சார்ந்த நீதிமன்ற காவல் / விசாரணை சிறைவாசிகள் சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப் படுகின்றனர். மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் மட்டுமே அந்தந்த மாவட்டச் சிறைகளில் வைக்கப் படுகின்றனர். சிறு குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் மட்டும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர்.

பெண்களுக்கான தனிச் சிறைகளில் பெண் சிறைவாசிகள் மட்டுமே அடைக்கப் படுகின்றனர். கடுங்குற்றங்கள் புரிந்த பெண் சிறைவாசிகள் மாநிலத்தில் உள்ள ஐந்து பெண்கள் தனிச்சிறைகளில் வைக்கப் படுகின்றனர். சாதாரண குற்றங்கள் புரிந்த

நீதிமன்ற காவல் மற்றும் விசாரணை பெண் சிறைவாசிகள் பெண்களுக்கான தனிச் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் வைக்கப்பட்டு, பெண் பணியாளர்களால் மட்டுமே பாதுகாக்கப் படுகின்றனர்.

18 முதல் 21 வயதுக்குட்பட்ட, தண்டனைப் பெற்ற வளரிளம் குற்றவாளிகள், புதுக்கோட்டையில் உள்ள மாவட்டச்சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். இதர விசாரணை / காவல் வளரிளம் குற்றவாளிகள் ஏனைய 11 இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் வைக்கப்படுகின்றனர்.

## IV. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் இயங்கி வரும் பிரிவுகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

**i) நன்னடத்தைப் பிரிவு**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் நன்னடத்தை பிரிவு, தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் 64 நன்னடத்தை அலுவலர்களையும், 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டு செயல்படுகிறது. நன்னடத்தை அலுவலர்கள் நீதிமன்றத்திற்காக குற்றவாளி களின் நடத்தை மற்றும் அவர்கள் வாழ்க்கை நிலைகள் குறித்து விசாரணை செய்கிறார்கள். அவர்கள் நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர். மேலும், முதன் முறையாக குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக சில நிபந்தனைகளின் அடிப்படையில் நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான

பணியாகும். நன்னடத்தை அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய குடும்பத் தினருக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். காவல்நிலைய சிறை வைப்பு அறைகளில் மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு அவற்றை பார்வையிடுமாறும் நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**ii) நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு**

நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு, சிறைவாசிகள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைப் பணியாளர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து சிறை நிர்வாகத்தினை திறம்பட செயல்படுத்த முக்கிய மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரித்தளிப்பதுடன், நுண்ணறிவு தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றமும் செய்ய உருவாக்கப்பட்டது.

காவல்துறையிலிருந்து மாற்றுப் பணியின் மூலம் பணியமர்த்தப்பட்ட 20 அதிகாரிகளையும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையைச் சேர்ந்த 13 அதிகாரிகளையும் உள்ளடக்கிய நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு ஒன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ளது

**iii) சட்ட ஆலோசனைப் பிரிவு**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்தில் சட்ட ஆலோனைகளை வழங்கிடவும், நீதிமன்ற வழக்குகளை நிர்வகிப்பதில் உதவிடவும், குற்ற வழக்குகள் தொடர்புடைய சட்ட ஆலோசகரின் தலைமையில் "சட்ட ஆலோசனைப் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு, அரசு உதவி வழக்கு நடத்துநர் (தரம்–1) என்ற நிலையில் உள்ள வழக்குரைஞர், குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குநர் அலுவலகத்தின் மூலம் நிரப்பப்பட்டு இயங்கி வருகிறது.

### iv) தொழில்நுட்பப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகளை சிறந்த முறையில் பராமரித்திட "தொழில்நுட்பப் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு அப்பிரிவு ஓர் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) உள்ளடக்கிய பணியாளர்களைக் கொண்டு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் தலைமையிடம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும் செயல்பட்டு வருகிறது.

### v) மோட்டார் வாகனப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும், வாகன ஓட்டுநர்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற் காகவும், "மோட்டார் வாகனப் பிரிவு" தோற்றுவிக்கப் பட்டு, காப்பு காவல் ஆய்வாளர் (வகை–2) தலைமையில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப்

பணிகள் துறையின் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது.

## V. மனிதவள மேம்பாடு

### பணியாளர் தேர்வு

இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் 2020ம் ஆண்டிற்கு 119 (112 ஆண்கள், 7 பெண்கள்) இரண்டாம் நிலை சிறைக் காவலர் நியமனத்திற்கு எழுத்து தேர்வு நடத்தப் பட்டுள்ளது, தகுதியான நபர்களுக்கான காவல்துறை அறிக்கை மற்றும் மருத்துவ பரிசோதனை அறிக்கை பெறப்பட்ட பின்னர், இரண்டாம் நிலை சிறைக் காவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு, திருச்சி சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் அடிப்படை பயிற்சி வழங்கப்படும்.

சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பதவிக்கு நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப் படுகின்றனர். தற்போது ஒரு சிறை அலுவலர் பதவியில், ஒரு பணியிடம் நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உதவி சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பதவிக்கு நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்

## பயிற்சி

### i) சிறைக் காவலர் பயிற்சி

வேலூர், மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் சிறைக் காவலர் பயிற்சி

பள்ளியில், 130 சிறைக் காவலர்களுக்கு ஒரே நேரத்தில் அடிப்படை பயிற்சி வழங்கும் வசதிகள் கொண்ட காவலர் பயிற்சி பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இப்பள்ளி தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் காவலர்களுக்கு உடற் பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் ஆறு மாதகால அடிப்படைப் பயிற்சிகள், நவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்களைப் பேணி கையாள்வதற்கான பயிற்சிகளும், பணியின் தன்மையினை அறிந்து கொள்வதற்காக, மத்திய சிறைகளில் ஒரு மாத காலம் நேரடி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், சிறைவாசிகளுக்கான மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சியும் கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை, மருதம் காவல்துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளியில் வழங்கப் படும், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல், அதிரடிப் படைக்கான பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் ஆகியவை சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மேலும், சிறைக்காவலர்களுக்கு குத்துச் சண்டை, ஜூடோ மற்றும் மல்யுத்தம் ஆகியவற்றின் நுணுக்கங்களை ஒருங்கே கொண்ட "க்ரவ் மேகா" என்ற ஆயுதமின்றி தனித்து போரிடும் தற்காப்பு முறைப் பயிற்சியும் வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் அளிக்கப் படுகிறது. இத்தகைய பயிற்சித் திட்டங்கள் சிறைக் காவலர்களின் மன உறுதியை மேம் படுத்துவதுடன் அவசரகால சூழ்நிலைகளை அவர்கள் திறம்பட சமாளிக்கவும் ஏதுவாக அமைகின்றன.

மேலும், புதிதாக தேர்வு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்பட உள்ள 119 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு (112 ஆண்கள் மற்றும் 7 பெண்கள்) திருச்சி சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் 2021ம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்படும்.

உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை சிறை அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் அளிக்கப்பட்டு வருகின்றன.

### ii) சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்

சிறை மற்றும் சீர்திருத்த நிர்வாகப் பயிற்சியகம் (APCA) என்ற ஐந்து தென்னக மாநிலங்களின் கூட்டுப் பயிற்சி மையம் வேலூரில் தொடங்கப்பட்டது. இந்த மாநில கூட்டுப் பயிற்சி மையத்தில் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகம் மற்றும்

கேரளம் ஆகிய ஐந்து தென் மாநிலங்களைச் சார்ந்த சிறைத்துறை அலுவலர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் பட்டுகிறது வருகிறது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

தற்போது வேலூரில் உள்ள இந்த பயிற்சி மையத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2020ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 24 உதவி சிறை அலுவலர்களில், 18 உதவி சிறை அலுவலர்கள் 9 மாதகால பயிற்சியினை முடித்துள்ளனர். மீதமுள்ள 6 உதவி சிறை அலுவலர்கள் 9 மாதகால பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியகத்தில் 15.04.2021 வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 1,683 சிறைத்துறை அலுவலர்கள் வெற்றிகரமாக பயிற்சி பெற்றுள்ளனர்.

**iii) பிற பயிற்சிகள்**

புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம், லோக்நாயக் ஜெயப் பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் மற்றும் பிற மாநிலங்களில் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்து நடத்தப்படும் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கு துறை சார்ந்த அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்நிறுவனங்களில் 2020–2021ம் ஆண்டில், 67 அலுவலர்கள் பல்வேறு தேசிய அளவிலான பயிற்சித் திட்டங்களில் இணைய வழியில் பயிற்சி பெற்றுள்ளனர்.

## VI. சிறைப் பாதுகாப்பு

### i) மறைகாணி (CCTV Cameras)

257 மறைகாணிகள் (CCTV) அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில் முக்கிய இடங்களில் மறைகாணிகள் (CCTV) நிறுவப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 100 கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் ஐபி கேமிராக்கள் (Internet Protocol Cameras) மற்றும் சிறைவாசிகளின் அனைத்து விவரங்கள் உள்ளடக்கிய மின்னணு அட்டை வழங்கப்பட்டு, அதனை 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டையில் சிறை மேலாண்மை திட்டத்துடன் ஒருங்கிணைத்து, எல்காட்

நிறுவனம் மூலம் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கான ஒப்பந்த பணிகள் நடைபெற்று வருகிறது.

**ii) வாக்கி டாக்கி கருவிகள்**

அனைத்து மத்திய சிறைகள், மாவட்ட சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி ஆகியவற்றில் உபரி மின்கலத்துடன் கூடிய 380 புதிய வாக்கி டாக்கி கருவிகள் வாங்கப்பட்டு, அவை நன்றாக இயங்கி வருகின்றன.

மத்திய சிறைகள் புழல்–I, II, திருச்சி மற்றும் கோயம்புத்தூரில் 4 ரிப்பிட்டர் செட்டுகள் நிறுவப் பட்டுள்ளன.

**iii) செல்லிடத்து தொலை பேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்**

சிறைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், மாநிலத்தில் 9

மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில் செல்லிடத்துத் தொலை பேசியை செயலிழக்கச் செய்யும் உயர்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், புழல் I மற்றும் II, பாளையங்கோட்டை, மதுரை, திருச்சி ஆகிய மத்திய சிறைகளிலும் புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மற்றும் மதுரையில் உள்ள 5 பெண்கள் தனிச் சிறைகளிலும் கூடுதலாக 12 கருவிகள் ரூ. 10.10 கோடி செலவில் அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திட ஒன்றிய அரசின் அமைச்சரவை செயலகத்தின் ஒப்புதல் பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**iv) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் அமைப்பினை நிறுவுதல் (Security Poles)**

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் கீழ் சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும்

வகையில், 9 மத்திய சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் பாதுகாப்புக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

**v) உயர் பாதுகாப்பு தொகுதிகள்**

உயர் பாதுகாப்பு தொகுதிகளில், முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். இச் சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். அனைத்து மத்திய சிறைகளிலும் உயர் பாதுகாப்பு தொகுதிகள் கட்டப்பட்டு உள்ளன. சிறைவாசிகளின் உரிமைக்கும் கண்ணியத்திற்கும் குறைவு ஏற்படாத வண்ணம் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும்

அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதற்கு சிறை நிர்வாகத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த உயர் பாதுகாப்பு தொகுதிகள் சிறைக் காவலர்களால் நன்கு கண்காணிக்கப்படுகின்றன. கடலூர் மத்திய சிறை தவிர, அனைத்து மத்திய சிறைகளின் வெளிப்புற பாதுகாப்பு காவல் துறையினரால் மேற்கொள்ளப் படுகிறது.

இந்த சிறைகளில் எந்த அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் மோப்ப நாய் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

**vi) ஊடுகதிர் அலகிடல் கருவிகள்**

போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதை தடுக்கும்

பொருட்டு 9 மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மதுரை, கோயம்புத்தூர், புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்டசிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

**vii) காணொளி கலந்துரையாடல் வசதிகள்**

வழிக்காவலின் போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், வழிக்காவலுக்கும் போக்குவரத்திற்கும் ஆகும் செலவைக் குறைக்கவும், சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், நீதிமன்றக் காவல் காணொலி கலந்துரையாடல் மூலம் நீட்டிக்கப்பதற்காக, சிறைகளையும் நீதிமன்ற வளாங்களையும் இணைக்கும் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

தற்போது, இத்திட்டம் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை வளாகங்களை உள்ளடக்கிய 50 இடங்களிலும், 42 சிறைகளிலும், 403 நீதிமன்றங்களை உள்ளடக்கிய 180 நீதிமன்ற வளாகங்களிலும் செயல்பாட்டில் உள்ளது. எனவே, தற்போது விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்ற காவல், காணொளி காட்சிகளின் மூலம் நீட்டிக்கப் படுகின்றன.

## VII. பணியாளர் நலன்

### i) காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல்துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் சலுகை, காவல் துறையைச் சார்ந்த சீருடை / அமைச்சுப் பணியாளர்களை போன்று, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற /

காலஞ்சென்ற சீருடை/ அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.

**ii) இடர்ப்படி, உணவுக் கட்டணம், தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி**

காவல் துறையினருக்கு இணையாக, வழங்கப்படும் இடர்ப்படி இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.800/-ம், சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.900/-ம், வழங்கப்பட்டு வருகிறது.

சிறை வளாகத்தில் அவசர காலத்தில் பாதுகாப்பு மற்றும் கூட்டாக கைது செய்யப்படும் சிறைவாசிகளை சோதனைப் செய்யும் பணிகளில் ஈடுபடும் மத்திய சிறை மற்றும் மாவட்ட சிறைகளில் பணிபுரியும் இரண்டாம்

நிலைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு சென்னை நகரத்தில் பத்து நாட்களுக்கு தலா ஒருவருக்கு ரூ.300/– வீதமும் இதர மாவட்டங்களில் ஆறு நாட்களுக்கு தலா ஒருவருக்கு ரூ.250/– வீதமும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள இரண்டாம் நிலை சிறைக்காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஒருவருக்கு ஆண்டு தோறும் ரூ.1000/ (ஒன்றுக்கு ரூ.500/– வீதம்) வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு

சலவைப்படி மாதம் ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது.

**iii) இரவு உணவுப்படி**

சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் தொடங்கி முதல் தலைமை சிறைக் காவலர்கள் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு இரவு உணவுப்படியாக ஒரு நாளைக்கு ரூ.100/- வழங்கப்பட்டு வருகிறது.

**iv) மிகை நேரப் பணி ஊதியம்**

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியமாக ரூ.200/- வழங்கப்படுகிறது.

**v) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான

நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவை வழங்கப்படுகின்றன.

**vi) குழுக் காப்பீட்டுத் திட்டம்**

பணியில் இருக்கும்போது அல்லது விபத்தின் காரணமாக இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு சிறைகள் மற்றும் சீர்திருத்தத் பணிகள் துறையினருக்கான குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், காப்பீட்டுத் தொகையாக ரூ.2.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் சிறைத் துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தத் பணிகள் துறை களப்பணியாளர்கள் பயன் பெறுவர்.

### vii) தமிழ்நாடு சிறை சேம நல நிதிக்கு வழங்கப்படும் மானியத் தொகை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும், அவர்களை சார்ந்து வாழ்பவர்களுக்கும் தமிழ்நாடு சிறை நல நிதியின் கீழ் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்நலநிதியிலிந்து இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு கல்லூரிக் கல்வி, நெடுநாட்பட்ட கடுமையான நோய்கள் விபத்து காயங்கள் போன்றவற்றிற்கான மருத்துவ சிகிச்சை ஆகிய இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும் பணியாளர்கள் அவரது தகுதியான குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும் இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள நிதிக்கு இணை மானியமாக அரசால் ரூ.10.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

### viii) கருணைத் தொகை வழங்குதல்

சிறைப்பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால், அவர் இறுதியாக பெற்ற ஊதியம் அவர் பணிமூப்பில் ஒய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வுதியமாக அவருடைய சட்டபடியான வாரிசுதாரர்களுக்கு வழங்கப் படுகிறது. அதற்குப்பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் மட்டும் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணைத் தொகை ரூ.2 இலட்சம் வழங்கப்படுகிறது. மரணம் போன்ற நேர்வுகள் தவிர கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு, அவற்றிற் கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது :–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர ஊனம் | ரூ. 50,000/– |
| 2. | படுகாயம் | ரூ. 10,000/– |
| 3. | சாதாரண காயம் | ரூ. 5,000/– |

**ix) சிறைக் களப் பணியாளர்களுக்கு மழை மேலங்கிகள் (Rain coats) மற்றும் கொசு வலைகள் வழங்குதல்**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் பணிபுரியும் களப் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 வருடத்திற்கு ஒரு முறை மழை மேலங்கிகளும் மற்றும் கொசு வலைகளும் வழங்கப்படுகின்றன.

**x) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 100 பணியாளர் குடியிருப்புகள் அரசால் கட்டித் தரப்பட்டு வருகிறது.

மத்திய சிறை, பாளையங்கோட்டை மற்றும் மதுரையில் பணிபுரிந்து வரும் சிறை அலுவலர்களுக்கு 4 குடியிருப்புகளை கட்டிட ரூ.120.00 இலட்சம் செலவில் அரசால் ஆணையிடப்பட்டு இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரிய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**xi) பதக்கங்கள்**

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும் சிறந்த பணிப்பதிவுருவைப் பேணும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சீருடைப் பணியாளர்களின் திறமையை அங்கீகரித்து, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:–

**தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைச் சேவைக்கான பதக்கம்– அண்ணா பதக்கம்**

ஒவ்வோராண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் 10 சீருடைப் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப் படுகிறது. இப்பதக்கம் பெறும் பணியாளர் களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு தொகையும் வழங்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | சிறை அலுவலர் முதல் சிறைக்கண்காணிப்பாளர் வரை | ரூ.15,000/– |
| 2. | உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் | ரூ.10,000/– |
| 3. | இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் முதல் தலைமை சிறைக் காவலர் வரை | ரூ. 5,000/– |

**தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணிப் பதக்கம்–பொங்கல் பதக்கம்**

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர் களுக்கு அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக அப்பதக்கமும், இதனைப் பெறுவோருக்கு மாதந்தோறும் ரூ.400/– பதக்கப் படியாக அரசால் பெற்று வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம்**

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு இத்திட்டத்தின் கீழ் முறை மாதாந்திரப் படியாக வழங்கப்பட்டு வந்த ரூ.300/–க்கு பதிலாக, தற்போது, இப்பதக்கம் பெறுவோருக்கு,

அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும், ரொக்கப் பரிசு ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

**குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்**

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினரின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2021ம் ஆண்டு குடியரசு தினத்தன்று 2 சிறைத்துறை பணியாளர்களும் மற்றும் 2021ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று 4 சிறைத் துறை பணியாளர்களும், இப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

**xii) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள கீழ்கண்ட மூத்த அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் திட்டமிட்டபடி கீழ்க்

கண்டவாறு நடத்தப்பட்டு, சிறைப் பணியாளர்களின் குறைகள் களையப் படுகின்றன :–

| | | |
|---|---|---|
| 1. | காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் | காலாண்டிற்கு ஒருமுறை |
| 2. | சரக சிறைத்துறை துணை தலைவர் | மாதம் ஒருமுறை |
| 3. | சிறை கண்காணிப்பாளர்கள் | வாரம் ஒருமுறை |

குறை தீர்ப்பு கூட்டங்களின் போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதைத் தவிர, காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் சிறைகளில் ஆய்வு

மேற்கொள்ளும் போதும், சிறைகளைப் பார்வையிடும் போதும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை யகத்திலும் பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு மனுக்களைப் பெற்றுக் கொள்கிறார்.

## VIII. சிறைவாசிகளின் மறுவாழ்வு

### i) உணவு மற்றும் உடை

அசைவ உணவு சாப்பிடும் அனைத்து சிறைவாசிகளுக்கும் வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு, வாரம் ஒரு முறை உருளைக்கிழங்கு பொரியல், கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம் ஆகியனவும் வழங்கப்பட்டு வருகிறது. சமையலறையில் எவர்சில்வர் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல எவர்சில்வர் தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப் படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு

வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும் குவளை களிலும் பரிமாறப்படுகின்றன.

நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவுகளாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியன மருத்துவ அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகிறது.

மேற்படி உணவு முறை, தமிழ்நாடு சிறை விதிகள், 1983ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி சத்தான மற்றும் சமச்சீரான உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது.

சிறைவாசிகளுக்கு ரூ.50/– மதிப்பில் பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் மகாத்மா காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

நீண்டகாலமாக சிறைவாசிகளுக்கான உணவினை சமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு

வந்த நிலக்கடலை எண்ணெய் கூடுதல் கொழுப்பை கொண்டுள்ளது என்பதால், இதனைத் தொடர்ந்து பயன்படுத்தினால் சிறைவாசிகளுக்கு பல்வேறு வகையான உடல்நலக் கேடுகள் ஏற்படலாம் என்பதால், அவர்களுக்கான உணவினை தயாரிக்க, வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயையும், ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ணெயையும் உபயோகப்படுத்திட, அரசால் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் ஆடைகளும் படுக்கைகளும் தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்டவாறு வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப் பட்டுள்ள தண்டனை சிறைவாசிகளுக்கு ஒரே மாதிரியான டெரிகாட்டன் முழுக்கால் சட்டைகளும், அரைக்கை மேல்சட்டைகளும்,

பெரிய அளவிலான போர்வைகளும் வழங்கப் படுகின்றன.

விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான ஆடைகளை அவர்களே கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். போதிய ஆடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு மட்டும் அரசு செலவில் போதுமான ஆடைகள் வழங்கப்படுகின்றன.

**ii) சிறைவாசிகளின் மருத்துவ பாதுகாப்பு**

சிறைவாசிகளுக்கு போதுமான மருத்துவ வசதி அளிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக சிறைவாசிகள் சிறையில் தண்டனையைக் கழிப்பது அவர்களின் மன இறுக்கத்தினை அதிகப்படுத்தி, அவர்களிடம் வன்முறை செயல்பாடு, மன அழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்களாக வெளிப்படுகின்றன. எனவே,

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் மாவட்டச்சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் மனஇயல் நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களது பணி, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கும், வன்முறை செயலினை வெளிப்படுத்தும் குணமுடைய சிறைவாசிகளுக்கும், ஆலோசனை வழங்கி சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படுகிறது. மனநல ஆலோசனை யானது, மன அழுத்தத்தால் அவதியுறும் சிறைவாசிகளின் மனதில் நம்பிக்கையை விளைவிப்பதால், தன்னம்பிக்கை மூலம் தற்கொலை எண்ணம் அகற்றப்படுகிறது. மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசி களுக்கு, சென்னை அரசு மனநல காப்பகத்திலும், அரசு மருத்துவமனைகளில்

உள்ள மனஇயல் நிபுணர்களைக் கொண்டும் தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மனதளவில் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளின் மனநலனை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு ஆற்றுப்படுத்துநர்களும் (Counsellors), ஒவ்வொரு பெண்கள் தனிச்சிறை மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிக்கு தலா ஒரு ஆற்றுப்படுத்துநரும் (Counsellor) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனை வழங்குவதுடன், உடற்பயிற்சி, யோகா, தியானம், உள் மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 21 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து சிறைகளிலும் செயல்பட்டு வரும் நூலகங்களிலிருந்து சிறைவாசிகள்

புத்தகங்களைப் பெற்று, பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதிகள் பொழுது போக்கு அம்சங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சிறைவாசிகளின் மன நலம் மேம்படவும் உதவுகின்றன.

**iii) சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி**

அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் சிறைவாசி களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கிட போதிய துணை மருத்துவ பணியாளர்கள் உதவியுடன் கூடிய அனுபவமிக்க மருத்துவர்களை கொண்ட சிறை மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தொடர் சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவ மனைகளில் உள் நோயளியாக அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்துவமனை களுக்கு கொண்டு செல்வதற்காக, அனைத்து

மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறைகள், பெண்கள் தனிக் கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறை, பெண்கள் தனிச் கிளைச் சிறை மற்றும் பெண்கள் கிளைச் சிறை, சிறை மருத்துவமனைகளிலும் மற்றும் 35 அவசர கால ஊர்திகளிலும் 21 வகையான உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

சிறைவாசிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக, மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G) இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், கண்பார்வை பரிசோதனை செய்யும் கருவிகள் (Ophthalmoscope), இரத்தத்தில் சர்க்கரையின்

அளவைக் கண்டறியும் கருவிகள் (Glucometer) மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஊடுகதிர் படமெடுக்கும் கருவிகள் (Portable X-Ray equipements) ஆகியன மத்திய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட உடல் உபாதை தொடர்பாக அனைத்து சிறைவாசிகளையும் பரிசோதிக்க ஏதுவாக குறித்த கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை கண்டறிய பரிசோதனை செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர் அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். நல வாழ்வு நடவடிக்கையாக

சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில், சிறைவாசிகளிடையே ஒட்டுநோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்தி மூலம் முகச்சவரம் செய்யும் முறை ஒழிக்கப்பட்டு, ஒருமுறை பயன்படுத்திய பின்னர் தூக்கி எறியக்கூடிய சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சுகாதார வசதிகள் ரூ.3.60 கோடி செலவில் மேம்படுத்தப் பட்டுள்ளன.

மேலும் 9 மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறை, புழல் மற்றும் திருச்சியில் ரூ.1240.01 இலட்சம் செலவில் சுகாதார

வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி, கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவில் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**iv) குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் சிறைவாசிகள் நேர்காணல்**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது நெருங்கிய குடும்ப உறவினர்களுடன் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல் செய்திட விண்ணப்பிக்க விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன, மேலும் இவ்விண்ணப்பப் படிவங்களை சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வெகு

தூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இந்த வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாகவும் முன் அனுமதி பெறலாம்.

### v) மனித உரிமை

சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து சிறை களிலும் அடிப்படை வசதிகளும், தேவைகளும் செய்து தரப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில் அதிக முக்கியத்துவத்தினை உணர்த்திட, இப்பொருள் குறித்து சிறை அலுவலர்களுக்கு போதுமான கூர்ந்துணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும், புத்தாக்கப் பயிற்சிகளிலும், சிறைவாசிகளின் மனித உரிமைகள்

தொடர்பான விவகாரங்களிலும் பக்குவப்படுத்தப் படுகின்றனர்.

சிறை நிர்வாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து ஆய்வு செய்வதற்கு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் குறித்த கால இடைவெளியில் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப் பட்டுள்ளனவா என்பதையும் அவர்கள் நடத்தப்படும் விதத்தையும் அறிய மனித உரிமை ஆணையங்களின் உறுப்பினர்களும், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளும், தமிழகத்தின் முக்கியப் பிரமுகர்களும் சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிர்வாகத்தை பாராட்டியுள்ளனர். இவை தவிர, சிறைகளை திடீர் பார்வையிட்டு அங்கு மனித உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளனவா என்று சோதனை செய்திட பொதுமக்களில் 62 நபர்கள்

அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

சிறைகளுக்கு வருகை புரிந்துள்ள தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்களின் உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு நீதிபதிகளும் இம்மாநிலத்தின் சிறை நிர்வாகத்தை பாராட்டி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**vi) பெண் சிறைவாசிகளின் நலன்**

பெண் சிறைவாசிகள் பெண் உதவி மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன. சிறையினுள் அனுமதிக்கப்படும்போதும் அதன் பின்னரும், கர்ப்பிணிப் பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன்

பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் ஒவ்வொருவருக்கும் தேவையான கவனம் செலுத்தப்படுகிறது. சிறைக்கு வெளியே பிரசவிக்க ஏதுவாக கர்ப்பிணி பெண் சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

நடைமுறையில் உள்ள சிறை விதிகளின்படி, பெண் சிறைவாசிகளின் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் உறவினர் களிடம் ஒப்படைக்க இயலாத, தகுந்த அக்கறை செலுத்துவோர் எவரும் இல்லாத நிலையில் தாயுடன் இருக்க அனுமதிக்கப்படுகின்றனர். சிறையில் பிறந்து கவனிப்போர் எவரும் இல்லாத நிலையில் உள்ள குழந்தைகள், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

பெண் சிறைவாசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை இணைக்கப் பட்டுள்ளன.

பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து அகியவற்றை கருத்தில் கொண்டு, பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப் படுகின்றன.

**vii) சிறப்பு நேர்காணல்**

பள்ளி, கல்லூரிக்கு செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் கணவன் அல்லது மனைவியின் வசதிக்காக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும், சிறைவாசிகளை வழக்குரைஞர்கள் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சனிக் கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**viii) சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளின் ஊதியம்**

தண்டனை பெற்ற சிறைவாசிகளுக் கிடையே உழைப்பின் அவசியத்தை மனதில் ஆழப் பதிய வைக்க ஏதுவாக, சிறை

தொழிற்கூடப்பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப் பட்டு, அத்தகைய பணியில் அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயற்திறன் பெற்றோர், ஓரளவு செயற்திறன் பெற்றோர், செயற்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப் பட்டு நாளொன்றுக்கு முறையே ரூ.200/–, ரூ.180/– மற்றும் ரூ.160/– ஊதியமாக வழங்கப் படுகிறது.

### ix) கல்வி மற்றும் தொழிற்கல்வி

### மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள்

தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும் ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், ஒருங்கிணைந்து இதற்கென திட்டம் ஒன்றை தொடங்கி சிறைவாசிகள் 100 சதவீத கல்வி அறிவை அடையும் பொருட்டு, செயல்பட்டு வருகின்றன. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகமும்

சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

சிறைவாசிகள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக் கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக பட்டப்படிப்பும் முதுநிலைப் பட்டப் படிப்பும் (v) சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என வகைப்படுத்தப்படுகிறது. தகுதி பெற்ற சிறைவாசிகளைக் கொண்டு சிறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைகளிலும் உள்ள எழுதப்படிக்க தெரியாத சிறைவாசிகளுக்கு சிறப்பு கல்வியறிவு பணி / திட்டத்தின் மூலமாக அடிப்படை கல்வியறிவு தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 1623 எழுதப்படிக்கத் தெரியாத

சிறைவாசிகளுக்கு அடிப்படை கல்வியறிவு வழங்க அரசால் ரூ.14.60 லட்சம் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக சிறைவாசிகள் அடையாளம் காணப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள சிறை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையினரால் மத்திய சிறை, புழல்–I வளாகத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த பயிற்சி வழங்கப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. சிறைவாசிகளுக்கு அஞ்சல்வழிக் கல்வி வசதி அரசு செலவில் வழங்கப்படுகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டு உள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் இலாபகரமான பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2020-2021ம் ஆண்டில் 68 சிறைவாசிகள் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 71 சிறைவாசிகள் 11ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 152 சிறைவாசிகள் 10ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 231 சிறைவாசிகள் 8ம் வகுப்பு தேர்வு எழுதுகின்றனர்.

2020-2021ம் ஆண்டில் மொத்தம் 10,307 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு

பல்வேறு பாடப்பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வந்துள்ளனர்:–

| **பாடப்பிரிவு** | **சிறைவாசிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம் | 1623 |
| அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 4233 |
| எழுத்தறிவு திட்டக்கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 3324 |
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 3 |
| கலை / அறிவியில் முதுகலை பட்டப்படிப்பு | 17 |
| கலை / அறிவியில் / வணிகவியல் / இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு | 164 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 57 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 129 |
| 8, 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு 231+152+71+68=522 | 522 |
| பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பு | 235 |
| **மொத்தம்** | **10,307** |

ஒரு புதிய முயற்சியாக, திருச்சி மத்திய சிறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2020-2021ம் ஆண்டில் 70 சிறைவாசிகள் பல்வேறு வகையான, கீழ்க்காணும் தொழிற் கல்விகளை பயின்று வருகின்றனர்:-

| வ. எண் | தொழிற் பயிற்சியின் பெயர் | காலம் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | பிட்டர் | 2 வருடம் | 4 | 4 | 8 |
| 2 | மின் கம்பியாளர் | 2 வருடம் | 12 | 8 | 20 |
| 3 | கணினி இயக்குநர் மற்றும் மென் பொருள் உதவியாளர் | 1 வருடம் | 9 | - | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வெட்டுதல் மற்றும் தைத்தல் | 1 வருடம் | 23 | – | 23 |
| 5 | வெல்டர் (வாயு மற்றும் மின்சாரம்) | 1 வருடம் | 10 | – | 10 |
| **மொத்தம்** | | | **58** | **12** | **70** |

### x) சிறைத் தொழிற்சாலைகளில் தொழிற் பயிற்சித் திறன் பெறுதல் மற்றும் தொழில் உற்பத்தியில் பங்கு பெறுதல்

தண்டனை காலத்தில் சிறைவாசிகள் உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத்திறன்களைக் கற்பிக்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்பான்கள் உற்பத்தி, சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பாலீஸ் தொழிற்கூடம்,

அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், நிலக்கரி சாம்பல் தொழிற்கூடம் மற்றும் பயிற்சிக்கூடம் ஆகியவை சிறைச் சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் அவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், நல்ல வேலைவாய்ப்புப் பெற ஏதுவாகவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் திறன் மற்றும் உற்பத்தித் திறனில் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன., மேலும் தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி இயற்கை உர உற்பத்தி போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட் களான, சீருடைத் துணி, பெல்ட், தொப்பி, சீருடைக் காலணிகள், காலணி பாலீஸ், மழை மேலங்கி (Rain coat), கொசு வலை போன்றவை

காவல், தீயணைப்பு, மற்றும் மீட்புப் பணிகள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகியத் துறைகளுக்கும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பாண்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்துப் பெட்டகங்கள் (Bed–side Lockers) போன்றவை சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை 'சேவைத் துறை' என்கிற வகையில், பல்வேறு அரசுத் துறைகளுக்கு பொருட்கள் வழங்குவதில் சிறப்புரிமை பெற்று வழங்கி வருகிறது.

2020 – 2021–ம் ஆண்டில் சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.5910.45 இலட்சம் ஆகும்.

### xi) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு கோரும், விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன்தொடர்புடைய தொழிற் கூடங்கள் உள்ளனவா போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப் படுகின்றன.

### xii) விசாரணை சிறைவாசிகள் சீர்திருத்த திட்டம் – (PATTAM)

சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு திட்டங்களை செயல்படுத்திட சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சிறைவாசிகளுக்காக பல்வேறு சீர்திருத்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு தொலை நோக்கு திட்டம்

தான் 'பட்டம்' (PATTAM). இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். சிறைவாசி களுக்கான ஒரு முழுமையான சீர்திருத்த திட்டத்தை அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காவல்துறை, நீதித்துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.

பட்டம் திட்டமானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைகளுக் கிணங்க சிறு குற்ற செயல்களில் ஈடுபட்டு முதல் முறையாக சிறைபடும் 18ல் இருந்து 24 வயதிற்கு உட்பட்ட இளம் குற்றவாளி களுக்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்டதாகும். இத்திட்டம் முதலில் சைதாப்பேட்டை

கிளைச்சிறையில் துவங்கப்பட்டு புழல்–II, மத்திய சிறைக்கு நீட்டிக்கப்பட்டது.

**xiii) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை**

சிறைவாசிகளின் குறைகளைத் தீர்வு செய்வது, முன்னுரிமை அளிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார் மனுக்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அதிகாரி களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதைத்தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை ஆய்வு செய்வதுடன், அவர்களின் குறைகளையும் கேட்டறிகின்றனர்.

காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநரும், சரக சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், சிறைகளில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளும் போது, ஒவ்வொரு சிறைவாசியின் குறைகளையும் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அனைத்து சிறைவாசிகள் ஆய்வு அணி வகுப்பினை ஒவ்வொரு வாரமும் சிறைக் கண்காணிப்பாளர்கள் நடத்துகின்றனர். அப்போது சிறைவாசிகளது குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்கின்றனர்.

## xiv) பார்வையாளர் மேலாண்மைத் திட்டம்

ரூ.1.30 கோடி செலவில், அனைத்து மத்திய சிறைகள், மூன்று பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளை காண வரும் பார்வையாளர் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும் எளிய வழிமுறைகளைக் கொண்ட பார்வையாளர் மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## xv) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்க ஏதுவாகவும், சிறைவாசி களின் பயன்பாட்டிற்காகவும், இலவச சட்ட உதவி மையத்தை தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு, அனைத்து மத்திய

சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் அமைத்துள்ளது.

**xvi) சிறை நீதிமன்றங்கள்**

அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்களை ஏற்படுத்தி, சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும், நீதித்துறை நடுவர்கள் இந்த சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசி களது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர். மேலும், 19.12.2018 அன்று மாவட்ட இலவச சட்ட உதவிக்குழு தலைவர் மற்றும் வட்டார இலவச சட்ட உதவிக்குழு தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சிறை நீதிமன்றங்களில் அந்தந்த மாவட்ட மற்றும் வட்டாரத்திற்குட்பட்ட 252 வழக்குகள்

தீர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் **01.01.2016 முதல் 31.07.2021** வரை **3964 வழக்குகள்** சிறை நீதிமன்றங்களின் மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

**xvii) வானொலிப் பெட்டி வசதி**

வானொலிப் பெட்டியின் மூலம் ஒலிபரப்பப்படும் இசை மற்றும் இதர நிகழ்ச்சிகள், சிறைவாசிகளின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைக்கின்றன. சிறைவாசிகளது தனிமை மற்றும் அச்ச உணர்வினை குறைப்பதற்காக அலைபெருக்கி யுடன் கூடிய 96 பண்பலை வானொலிப் பெட்டிகள் மற்றும் 384 ஒலிப்பெருக்கிகள் ரூ.14.55 இலட்சம் செலவில் அனைத்து கிளைச் சிறைகளுக்கும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**xviii) சிறை வாசிகளின் பயன்பாட்டிற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகப்படுத்துதல்**

சிறைவாசிகள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடுவதன் மூலம் மன அழுத்தம் குறைகிறது. 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் இளம்குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை, 9 மாவட்ட சிறைகள் மற்றும் 2 திறந்த வெளிச்சிறைகள் ஆகியவற்றில் ரூ.300.29 இலட்சம் செலவில் 65 தொலைபேசி கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த வசதியின் மூலம், அவர்களின் மன அழுத்தம் வெகுவாகக் குறைகிறது.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி வசதியை உபயோகிக்கும் எண்ணிக்கையை ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு 4 ஞாயிற்றுக்

கிழமைகள் உட்பட 5 முறையிலிருந்து 8 முறையாகவும், பேசும் நேரத்தை 45 நிமிடங்களிலிருந்து 56 நிமிடங்களாகவும் அதிகரிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. 31.07.2021 அன்றுள்ளவாறு, சிறைவாசிகளால் இவ்வசதியானது 12,33,724 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**xix) சீர்திருத்தப் பணிகள்**

**சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு**

சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும், விடுதலைக்கு பின்னர் சமுதாயத்தில் அவர்கள் மீண்டும் இணைந்து வாழ உதவும் வகையிலும் தமிழகச் சிறைகளில் பல்வேறு புதுமையான சீர்திருத்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செய்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த திட்டங்கள், சிறைவாசிகள் விடுதலைக்குப்

பின்னர் வேலைவாய்ப்பு பெறவோ அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ளவோ ஏதுவாக இருந்து வருகின்றன.

**xx) சவ்வூடு பரவல் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் நிறுவுதல்**

9 மத்திய சிறைகளில் ஒரு மணி நேரத்திற்கு 1000 லிட்டர் கொள்ளளவிலும், புழல், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளில் ஒரு மணி நேரத்திற்கு 500 லிட்டர் கொள்ளளவிலும் சவ்வூடு பரவல் மூலம் குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் நிறுவப் பட்டுள்ளன.

**xxi) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்**

மத்திய சிறை, வேலூர் மற்றும் பாளையங்கோட்டையில் ரூ.493.70 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டது. மேலும், மத்திய சிறை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய

சிறைகளில் ரூ.380.27 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட ஆணையிடப்பட்டு தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் இப்பணிகள் முடிவடைந்துள்ளன. மத்திய சிறை, கோவை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய சிறைகளில் தண்ணீர் சேகரிப்பு மற்றும் சோதித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**xxii) தண்டனைக் குறைப்பு முறையினை ஒழுங்குபடுத்துதல்**

சிறைவாசிகள் தங்களது நடத்தையை மாற்றிக் கொள்ள ஏதுவாக அவர்களிடத்தில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் செயல்நோக்கக் காரணிகளில் தண்டனைக் குறைப்பும் ஒன்றாகும். எனவே தண்டனைக் குறைப்பு முறையினை மேலும் சீரிய முறையில் செயலாக்கம் செய்திட 9 அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் அனைத்து

மத்திய சிறைகளிலும் அரசால் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

## IX. சிறைகளில் கோவிட் – 19 மேலாண்மை

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினால் கோவிட்-19 முதல் மற்றும் இரண்டாம் அலைப் பரவலில் சிறைவாசிகள் மற்றும் பணியாளர்களுக்கு தொற்று பரவுவதை தடுக்க மற்றும் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான விவரம்.**

i. அனைத்து சிறைவாசிகளுக்கும் அவ்வப் போது கோவிட்–19 தொற்று அறிகுறிகள் உள்ளதா என பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. காய்ச்சல், சளி, இருமல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் உள்ள சிறைவாசிகள் உடனடியாக தனிமைப் படுத்தப்பட்டு, அவர்களுக்கு கோவிட்–19 பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. கோவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்ட சிறைவாசி களுக்கு, மாவட்ட

அரசு மருத்துவமனை களில் உரிய மேல் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

ii. சிறையில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகள் மற்றும் சிறை வளாகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே சிறையினுள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

iii. சிறையினுள் போதுமான அளவு சோப்பு மற்றும் கிருமிநாசினி பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகள் அவ்வப்போது அவற்றை பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டும் வருகிறது. பெட்ரோல் பங்குகளில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

iv. சிறையினுள் பார்வையாளர்கள் வருகை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிர்வாக காரணங்களைத் தவிர ஏனைய காரணங்களுக்காக சிறைவாசிகள்

சிறைமாற்றம் செய்யப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

v. சிறைவாசிகள் ஒரே நேரத்தில் கூட்டமாக கூடுவதற்கு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் 72 மணி நேரத்திற்குள் கோவிட்–19 பரிசோதனை மேற்கொண்டு தொற்று இல்லை என்ற சான்றையோ அல்லது இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி கொண்டதற்கான சான்றையோ சமர்ப்பித்தப் பின்னரே சிறையினுள் அனுமதிக்கப் படுகின்றனர். வழக்குரைஞர்கள் மற்றும் உறவினர்களை தொடர்பு கொள்ள தொலைபேசி வசதியுடன் செல்பேசி மூலம் காணொலி அழைப்பு (Video Call) செய்யவும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

vi. சிறையின் பொது இடங்களான கழிவறைகள், மருத்துவமனை, வளாகம்

மற்றும் தொலைபேசி அறை அவ்வப்போது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப் படுகின்றன.

vii. மேலும் உச்ச நீதிமன்ற ஆணை எண். WP (Civil ) No. 1/2020. நாள் 23.03.2020 –ன் படி சிறைகளில் இடநெருக்கடியை குறைப்பதற்கு தகுதியான சிறைவாசிகளை பிணையில் விடுவிப்பது தொடர்பாக, மாநில சட்ட பணிகள் குழு தலைவர் தலைமையில், உயர் மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. 31.8.2021 வரை 52,180 விசாரணை சிறைவாசிகள் சொந்த பிணையிலும் (Personal Bond Covid Bail) 76,381 சிறைவாசிகள் வழக்கமான பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

viii. சிறையினுள் புதிதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கென 108 சிறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கொரோனா பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில்

சிறைவாசிகள் சிறையில் அனுமதிக்கப் படுகின்றனர்.

ix. வயதான சிறைவாசிகள், கர்ப்பிணி சிறைவாசிகள், இதர நோய் உள்ள சிறைவாசிகள் மற்றும் பெண் சிறைவாசி யுடன் தங்கியிருக்கும் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோர் நலனில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

x. அரசாணை நிலை எண். 790 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 23.12.2020 மற்றும் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் Proc.No.O.C–I/563/2020 dated: 26.12.2020 ன் படி கொரோனா கால பேரிடர் நிவாரண நிதியாக ரூ,.1,15,17,000/– இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் Disinfectant, Sanitizer மற்றும் இதர

அத்தியவசிய பொருட்கள் வாங்குவதற்கு இத்தொகை செலவு செய்யப்பட்டது

xi. 31.8.2021 அன்றைய நிலவரப்படி, 120 தண்டனை சிறைவாசிகள், 1719 விசாரணை சிறைவாசிகள் கோவிட்–19 தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். 1 தண்டனை சிறைவாசி, 2 விசாரணை சிறைவாசிகள் கோவிட்–19 தொற்று கரணமாக இறந்தனர். தற்போது 7 விசாரணை சிறைவாசிகள் சிகிச்சையில் உள்ளனர். 983 பணியாளர்கள் இதுவரை கோவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்டனர் 15 பணியாளர்கள் இறந்தனர். தற்போது 6 பணியாளர்கள் சிகிச்சையில் உள்ளனர்.

xii. 31.8.2021 அன்றைய நிலவரப்படி 4,147 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 12,969 விசாரணை சிறைவாசிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 4,256 பணியாளர் களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

## X. புதிய செயல்பாடுகள்

### i) பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் வழங்குதல்

9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன் கூடிய வண்ணப் புகைப்படக் கருவி ரூ.21.85 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட ஆணையிடப்பட்டது. ஒப்பந்தம் மூலமாக கொள்முதல் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### ii) சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல்

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனத்தை ரூ.2.41 கோடி செலவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் குழுமம் மூலம் நிறுவப்பட்டு, நல்ல முறையில் இயங்கிவரும் நிலையில் இதர மத்திய சிறைகளில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனத்தை பொருத்திட ரூ.2132.83 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கீடு

பெறப்பட்டது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் கோரியபடி அனைத்து சிறை களிலிருந்து ஸ்திரத்தன்மை சான்றிதழ் பெறப்பட்டு மேம்பாட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. இதன் அடிப்படையில் சாதனத்தின் திறன்மாற்றப்பட்டு திருத்திய திட்டமதிப்பீடு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**iii) சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை அலுவலர்களின் நிதி அதிகார வரம்பினை உயர்த்துதல்**

துறை தலைவருக்கு மருந்துகள் உள்ளூரில் கொள்முதல் செய்ய அதிகாரிகளின் செலவின அதிகாரத்தினை ஏற்கனவே வழங்கப்பட்ட செலவின தொகை ரூ.5,000/– லிருந்து ரூ10,000/– ஆகவும், ரூ.3,000/– லிருந்து ரூ.6,000 ஆகவும் மற்றும் ரூ.2,000/– லிருந்து ரூ.4,000 ஆகவும் உயர்த்தி வழங்கிட நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**iv) மின்னனு திறப்பான் மேலாண்மை அமைப்பு முறை**

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் கீழ், மின்னனு திறப்பான் மேலாண்மை அமைப்பினை (Electronic Key Management System) ரூ.82.32 இலட்சம் செலவில் முதற்கட்டமாக புழல் சிறை வளாகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, மத்திய சிறை–1, 2 புழல் மற்றும் பெண்கள் தனிச்சிறை புழலில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**v) புதிய சிறைகள் கட்டுதல்**

மத்திய சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்க புதிய மாவட்டச் சிறைகள் துவங்கிடவும், சில கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக தரம் உயர்த்தவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட தேனி, மாவட்ட சிறையின் உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்திட முறையே ரூ.34.90 இலட்சம் செலவில் மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

புழல் மத்திய சிறை–2ல் அடைக்கப் பட்டுள்ள சிறைவாசிகளின் இட நெருக்கடியை கருத்தில் கொண்டு, கூடுதலாக 500 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில் ரூ.1505.84 இலட்சம் செலவில் கூடுதல் தொகுதிகள் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலைமச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டச் சிறை, செங்கல்பட்டில் கூடுதலாக 100 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில் ரூ.106.03 இலட்சம் செலவில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட

அனுமதிக்கப்பட்டுள்ள பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டு, ஒப்பந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**vi) புழல் மத்திய சிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கு நிர்வாக அலுவலகம் அமைத்தல்**

புழல் மத்தியசிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கான நிர்வாக அலுவலகம் ரூ.59.45 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப் பட்டது. கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலைமச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**vii) பாதுகாப்பு பெட்டக வசதியுடன் கூடிய உணவு அருந்தும் அறை அமைத்தல்**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் பணியாளர் களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதியுடன் கூடிய உணவு அருந்தும் அறை ரூ.251.72 இலட்சம் செலவில் அமைத்திடும் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரிய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**viii) புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல்**

9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச்சிறைகள் (புழல், திருச்சி மற்றும் வேலூர் (2 பணியிடங்கள்) மற்றும் மாவட்டசிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை (2 பணியிடங்கள்) ஆகியவற்றிற்கு கூடுதலாக 15 உதவி

மருத்துவ அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

பெண்கள் தனிச்சிறை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மன நிலை பாதிக்கப்பட்டுள்ள பெண் சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் பொருட்டு தலா ஒரு மனஇயல் நிபுணர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தனிச்சிறை, புழல், திருச்சி, வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் மாவட்டசிறை (ம) இளம்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்குவதற்கு ஏதுவாக தலா ஒரு மனநல ஆலோசகரை மாதம் ரூ.15,000/- மதிப்பூதியத்தின் அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள சிறைக் கண்காணிப்பாளர் களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சிறை–I, புழலில் ஒரு அலுவலக கண்காணிப்பாளர் பணியிடம், கணக்குப் பிரிவில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**ix) அடையாள அணிவகுப்பு அறை கட்டுதல்**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டசிறை (ம) பார்ஸ்டல்பள்ளி புதுக்கோட்டையில் அடையாள அணிவகுப்பு அறை ரூ.202.97 இலட்சம் செலவில் கட்டிடப் பணிகள் முடிவுற்று, இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**x) திண்டிவனம் கிளைச்சிறையை புதிய நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றுதல்.**

திண்டிவனம் கிளைச்சிறையை புதியதாக கட்டப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்திற்கு ரூ. 839.22 இலட்சம் செலவில் மாற்றிட அரசால் ஆணையிடப்பட்டு, பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு,

முதல் தளத்திற்கான மேற்கூரை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**xi) ஆண்டு பராமரிப்பு நிதி**

சிறை கட்டடங்கள் மற்றும் பணியாளர் களின் குடியிருப்புகளில் அவ்வப்போது ஏற்படும் பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் மேற்கொள்ள ஆண்டுடொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**xii) சிறை தொழிற்கூடங்கள்**

சிறைத் தொழிற் கூடங்களின் உட் கட்டமைப்பினை, விரிவாக்கம் செய்திட புதிய இயந்திரங்கள் வாங்குதல் மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் இயந்திரங்களை பராமரித்திட ரூ.200.00 இலட்சம் நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அடுமனைக் கூடத்தில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் அலகினை மத்திய சிறைகள் வேலூர், கடலூர், சேலம், கோவை, திருச்சி மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய சிறைகளில் நிறுவிட ரூ.210 இலட்சம் ஒப்புதல் வழங்கப் பட்டு, அடுமனைகள் செயல்பட்டு வருகின்றன.

வேலூர் மத்திய சிறையில் பெண்களுக்காக மட்டுமே தயாரிக்கும் இலகுரக காலணி தொழிற்கூட அலகினை நிறுவிட ரூ.126.00 இலட்சம் செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் கீழ் ரூ.48.00 இலட்சம் செலவில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் மணலுக்கு பதிலாக செப்பு கழிவு பொருட்களை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நடைபாதை ஓடுகளின் விரிவாக்க அலகினை நிறுவிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கோவை மத்திய சிறையின் நெசவுக் கூடத்தில் ஏற்கனவே உள்ள அளவிடல் இயந்திரங்களை ரூ.9.87 இலட்சம் செலவில் மேம்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சிறை தொழிற்கூடத்தின் பழைய இயந்திரங்களை மேம்படுத்தி பராமரிப்பதுடன், புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்திடவும், சிறை செய் பொருட்கள் தங்கு தடையின்றி பிற துறைகளுக்கு வழங்கும் பொருட்டும் ரூ.500 இலட்சம் செலவில் தொழிற்கூடங்கள் அமைத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**xiii) மத்திய சிறை வளாகங்களில் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைத்தல்**

முதற்கட்டமாக மத்திய சிறைகள் புழல்–I, வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் மாவட்டசிறை (ம) இளம்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறை

வளாகங்களில் திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து "முன்னோடி திட்டமாக" (Pilot Project) பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் சிறைவாசிகளின் மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வுக்கு ஏற்ற வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

தற்போது, இரண்டாம் கட்டமாக (அம்பத்தூர் சாலை புழல்–I, சேலம், விமான நிலைய சாலை திருச்சி, காந்தி சந்தை திருச்சி, மதுரை மற்றும் பாரதியார் சாலை கோயம்புத்தூர்) ஆகிய 6 இடங்களில் துவங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது.

**xiv) சிறை அங்காடிகள்**

சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில்

அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திட, மத்திய சிறை வளாகங்களின் எல்லைகளுக்குள் "சிறை அங்காடிகள்" அனைத்து மத்திய சிறைகள், சில மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறை வளாகங்களில் சிறை அங்காடிகள் நிறுவப் பட்டுள்ளன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை, தோட்டக்கலை தயாரிப்புக்கள், சலவை சோப்பு, மெழுகுவர்த்தி, கொசு வலை, மழை மேலங்கி (Rain coat), ஷு பாலீஷ், ஆயத்த ஆடைகள், தேன், மசாலாத் தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், குளிர் அழுத்தப்பட்ட

எண்ணெய் (Cold Pressed Edibile Oil) மண்புழு உரம், பஞ்ச கவ்யம், ஓவியங்கள் போன்ற இதர பொருட்கள் 'ஃப்ரீடம்' என்ற பதிவு செய்யப்பட்ட அடையாள பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் உணவகம் போன்ற இதர சில்லரை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

## XI) முடிவுரை


சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையின் சீரிய நிர்வாகத்திற்கு அரசு உரிய முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைக் கைதிகளின் நலன், சிறைப்பணியாளர்களின் நலன், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சிறைகளின் பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் மனித உரிமைகளைப் பேணுதல் ஆகியவற்றை மேம்படுத்தி, ஒருங்கிணைந்த தேவைகள் எப்போதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. சிறைவாசிகளுக்கென மிகச்சிறந்த சுத்தம் மற்றும் சுகாதார வசதிகளும், மேம்படுத்தப்பட்ட

மருத்துவ சேவையும் விரிவான ஆற்றுப் படுத்துதல் மற்றும் தியான வகுப்புகளும் தரமான தொழிற்கல்வி மற்றும் தொழிற்கூட பயிற்சியும் அளிப்பதுடன் உளவியல் ஆலோசனை களையும் குடும்பத்திற்கான ஆதரவினையும் வழங்குவதன் மூலம் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் சீர்திருத்த கொள்கைக்கான தளம் நிச்சயமாக வலுப்பெற்றுள்ளது எனலாம். சிறைப்பணியாளர் களுக்கு இடைவிடாது பயிற்சி அளிப்பதுடன் அவர்களுடைய அலுவல்களின் தன்மை குறித்து கூருணர்வுபடுத்தப்பட்டுள்ளனர். இம் முயற்சிகள் அனைத்தும் வரும் ஆண்டுகளிலும் தொடரும்.

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

## பிற்சேர்க்கை – I

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு




குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

# <u>பிற்சேர்க்கை – II</u>

## <u>அனைத்து சிறைகளில் உள்ள அடைப்பு எண்ணிக்கையின் விவரம்</u>

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்** | |
| 1 | மத்தியசிறை.I, புழல் | 1250 |
| 2 | மத்தியசிறை.II, புழல் | 1250 |
| 3 | பெண்கள் தனிச்சிறை, புழல் | 500 |
| 4 | பார்ஸ்டல் பள்ளி, புழல் | 100 |
| 5 | கிளைச்சிறை, சைதாப்பேட்டை | 175 |
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | |
| 6 | கிளைச்சிறை, காஞ்சிபுரம் | 34 |
| | **செங்கல்பட்டு மாவட்டம்** | |
| 7 | மாவட்டச்சிறை, செங்கல்பட்டு | 200 |
| 8 | கிளைச்சிறை, மதுராந்தகம் | 62 |
| | **திருவள்ளூர் மாவட்டம்** | |
| 9 | கிளைச்சிறை, திருவள்ளூர் | 36 |
| 10 | கிளைச்சிறை, பொன்னேரி | 42 |
| 11 | கிளைச்சிறை, திருத்தணி | 36 |
| 12 | தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி | 152 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **வேலூர் மாவட்டம்** | |
| 13 | மத்தியசிறை, வேலூர் | 2130 |
| 14 | பெண்கள் தனிச்சிறை, வேலூர் | 469 |
| 15 | பார்ஸ்டல் பள்ளி, வேலூர் (இணைப்பு) | 54 |
| 16 | கிளைச்சிறை, குடியாத்தம் | 54 |
| | **திருப்பத்தூர் மாவட்டம்** | |
| 17 | கிளைச்சிறை, ஆம்பூர் | 20 |
| 18 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 74 |
| 19 | கிளைச்சிறை, வாணியம்பாடி | 30 |
| 20 | கிளைச்சிறை, அரக்கோணம் | 36 |
| 21 | கிளைச்சிறை, வாலாஜா | 19 |
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| 22 | கிளைச்சிறை, செய்யாறு (வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது) | 48 |
| 23 | கிளைச்சிறை, திருவண்ணாமலை | 49 |
| 24 | கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 17 |
| 25 | கிளைச்சிறை, செங்கம் | 9 |
| 26 | கிளைச்சிறை, போளூர் | 36 |
| 27 | கிளைச்சிறை, வந்தவாசி | 19 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **கடலூர் மாவட்டம்** | |
| 28 | மத்தியசிறை, கடலூர் | 723 |
| 29 | கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| 30 | கிளைச்சிறை, கடலூர் | 143 |
| 31 | கிளைச்சிறை, விருத்தாச்சலம் | 30 |
| 32 | கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை | 24 |
| 33 | பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி | 15 |
| 34 | கிளைச்சிறை, சிதம்பரம் | 28 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | |
| 35 | மாவட்டச்சிறை, விழுப்புரம் | 200 |
| 36 | கிளைச்சிறை, விழுப்புரம் | 42 |
| 37 | கிளைச்சிறை, திண்டிவனம் | 29 |
| 38 | பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி | 80 |
| | **கள்ளக்குறிச்சி மாவட்டம்** | |
| 39 | கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| 40 | கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| 41 | கிளைச்சிறை, திருக்கோவிலூர் | 24 |
| | **சேலம் மாவட்டம்** | |
| 42 | மத்தியசிறை, சேலம் | 1431 |
| 43 | மாவட்டச்சிறை, ஆத்தூர் | 200 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 44 | திறந்தவெளிச்சிறை, சேலம் | 10 |
| 45 | தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள்) | 110 |
| 46 | பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி | 27 |
| 47 | கிளைச்சிறை, ஓமலூர் | 48 |
| | **நாமக்கல் மாவட்டம்** | |
| 48 | கிளைச்சிறை, நாமக்கல் | 34 |
| 49 | பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி | 16 |
| 50 | கிளைச்சிறை, ராசிபுரம் | 24 |
| 51 | கிளைச்சிறை, திருச்செங்கோடு | 19 |
| | **தருமபுரி மாவட்டம்** | |
| 52 | மாவட்ட சிறை, தருமபுரி | 200 |
| 53 | கிளைச்சிறை, தருமபுரி | 36 |
| 54 | கிளைச்சிறை, அரூர் | 48 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| 55 | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| 56 | கிளைச்சிறை, ஊத்தங்கரை | 16 |
| 57 | கிளைச்சிறை, ஓசூர் | 44 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 58 | மத்தியசிறை, கோயம்புத்தூர் | 2124 |
| 59 | பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர் | 187 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 60 | திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர் | 100 |
| 61 | கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 36 |
| 62 | பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி | 97 |
| | **ஈரோடு மாவட்டம்** | |
| 63 | மாவட்டச்சிறை, கோபிசெட்டிபாளையம் | 200 |
| 64 | கிளைச்சிறை, ஈரோடு | 35 |
| 65 | கிளைச்சிறை, சத்தியமங்கலம் | 16 |
| 66 | கிளைச்சிறை, பவானி | 24 |
| 67 | கிளைச்சிறை, பெருந்துறை | 8 |
| | **நீலகிரி மாவட்டம்** | |
| 68 | கிளைச்சிறை, உதகமண்டலம் | 35 |
| 69 | கிளைச்சிறை, குன்னூர் | 32 |
| 70 | கிளைச்சிறை, கூடலூர் | 28 |
| | **திருப்பூர் மாவட்டம்** | |
| 71 | மாவட்டச்சிறை, திருப்பூர் | 200 |
| 72 | கிளைச்சிறை, அவினாசி | 70 |
| 73 | கிளைச்சிறை, திருப்பூர் | 90 |
| 74 | கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை | 25 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 75 | கிளைச்சிறை, தாராபுரம் | 26 |
| 76 | கிளைச்சிறை, பல்லடம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 24 |
| | **திருச்சி மாவட்டம்** | |
| 77 | மத்தியசிறை, திருச்சி | 2517 |
| 78 | பெண்கள் தனிச்சிறை, திருச்சி | 600 |
| 79 | கிளைச்சிறை, மணப்பாறை | 14 |
| 80 | கிளைச்சிறை, முசிறி | 17 |
| 81 | கிளைச்சிறை, துறையூர் | 17 |
| 82 | கிளைச்சிறை, லால்குடி | 23 |
| | **அரியலூர் மாவட்டம்** | |
| 83 | பார்ஸ்டல் பள்ளி, அரியலூர் | 21 |
| 84 | கிளைச்சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| | **பெரம்பலூர் மாவட்டம்** | |
| 85 | கிளைச்சிறை, பெரம்பலூர் | 18 |
| | **கரூர் மாவட்டம்** | |
| 86 | கிளைச்சிறை, கரூர் | 36 |
| 87 | கிளைச்சிறை, குளித்தலை | 26 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்** | |
| 88 | மாவட்டச்சிறை, புதுக்கோட்டை | 200 |
| 89 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 245 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 90 | கிளைச்சிறை, அறந்தாங்கி | 28 |
| 91 | கிளைச்சிறை, திருமயம் | 14 |
| 92 | கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 8 |
| | **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| 93 | கிளைச்சிறை, திருவிடைமருதூர் | 51 |
| 94 | பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் | 87 |
| 95 | கிளைச்சிறை, பாபநாசம் | 46 |
| 96 | கிளைச்சிறை, பட்டுக்கோட்டை | 38 |
| 97 | கிளைச்சிறை, கும்பகோணம் | 44 |
| | **நாகப்பட்டினம் மாவட்டம்** | |
| 98 | மாவட்டச்சிறை, நாகப்பட்டினம் | 200 |
| 99 | கிளைச்சிறை, சீர்காழி | 28 |
| 100 | கிளைச்சிறை, மயிலாடுதுறை | 24 |
| 101 | கிளைச்சிறை, தரங்கம்பாடி | 12 |
| | **திருவாரூர் மாவட்டம்** | |
| 102 | கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| 103 | கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி | 28 |
| 104 | கிளைச்சிறை, நன்னிலம் | 24 |
| 105 | கிளைச்சிறை, மன்னார்குடி | 19 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **மதுரை மாவட்டம்** | |
| 106 | மத்தியசிறை, மதுரை | 1252 |
| 107 | பெண்கள் தனிச்சிறை, மதுரை | 262 |
| 108 | பார்ஸ்டல் பள்ளி, மேலூர் | 48 |
| 109 | கிளைச்சிறை, உசிலம்பட்டி | 18 |
| 110 | கிளைச்சிறை, திருமங்கலம் | 25 |
| | **திண்டுக்கல் மாவட்டம்** | |
| 111 | மாவட்டச்சிறை, திண்டுக்கல் | 200 |
| 112 | கிளைச்சிறை, வேடசந்தூர் | 16 |
| 113 | கிளைச்சிறை, பழனி | 43 |
| 114 | கிளைச்சிறை, கொடைக்கானல் | 9 |
| 115 | கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |
| | **தேனி மாவட்டம்** | |
| 116 | மாவட்டச்சிறை, தேனி | 200 |
| 117 | கிளைச்சிறை, உத்தமபாளையம் | 21 |
| 118 | கிளைச்சிறை, பெரியகுளம் | 39 |
| | **சிவகங்கை மாவட்டம்** | |
| 119 | கிளைச்சிறை, சிவகங்கை | 20 |
| 120 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 22 |
| 121 | திறந்த வெளிச்சிறை, புரசடை உடைப்பு | 150 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 122 | மாவட்டச்சிறை, இராமநாதபுரம் | 200 |
| 123 | கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்) | 18 |
| 124 | மாவட்டச்சிறை, முதுகுளத்தூர் | 21 |
| 125 | கிளைச்சிறை, திருவாடனை | 12 |
| | **விருதுநகர் மாவட்டம்** | |
| 126 | மாவட்டச்சிறை, விருதுநகர் | 200 |
| 127 | கிளைச்சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| 128 | கிளைச்சிறை, ஸ்ரீ வில்லிபுத்தூர் | 24 |
| 129 | கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 29 |
| | **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 130 | மத்தியசிறை, பாளையங்கோட்டை | 1332 |
| 131 | தனிக்கிளைச்சிறை கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |
| 132 | கிளைச்சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| 133 | பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி | 107 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **தென்காசி மாவட்டம்** | |
| 134 | கிளைச்சிறை, தென்காசி | 44 |
| 135 | கிளைச்சிறை, சங்கரன்கோவில் | 12 |
| | **தூத்துக்குடி மாவட்டம்** | |
| 136 | மாவட்டச்சிறை, பேரூரணி | 200 |
| 137 | கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம் | 72 |
| 138 | கிளைச்சிறை, கோவில்பட்டி | 42 |
| 139 | கிளைச்சிறை, திருச்செந்தூர் | 37 |
| | **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| 140 | மாவட்டச்சிறை, நாகர்கோவில் | 230 |
| 141 | கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்) | 24 |
| 142 | கிளைச்சிறை, குழித்துறை | 16 |
| | **மொத்தம்** | **23,592** |

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.